When the State appeal against the judgment of the High Court, dated 31st March 1967 was pending before the Supreme Court, the High Court framed for the levy of *ad-valorem* court fee, a new Rule 1-A of Order II of the High Court Fees Rules on the basis of the clarification given by the Supreme Court. This new rule was inserted and given effect to in September 1968.

In its judgment, dated 3rd March 1975 the High Court has now struck down article I of Schedule I to the Tamil Nadu Court fees and Suits Valuation Act, 1955 as invalid and has also ordered that the levy of *ad-valorem* court fee under the new rule of the High Court will continue. The High Court is of the opinion that the impost inherently bears within it more the concept of tax than fee and that the levy imposing as it does, on a particular section of litigants, a grossly disproportionate part of the burden, is unreasonable and arbitrary. While striking down Article 1 of Schedule I to the Court Fees Act, 1955 as invalid the High Court has allowed the writ petitions and applications with cost.

As the order of the High Court had created a vacuum in law in respect of levy of *ad-valorem* court fee in the lower Courts the Government moved the High Court and obtained the stay of orders of the High Court in respect of the levy of *ad-valorem* court fee in courts other than the High Court.

திரு. செ. அரங்கநாயகம் : இந்த ஷெட்யூல் 1, ஆர்டிகிள் 1-ஐ ஸ்ட்ரக்டவுன் செய்து வந்த உயர்நீதி மன்ற தீர்ப்புக்கான அந்த வழக்கு 20 ஆண்டுக் காலமாக நடைபெற்று வருகிறது. இந்தத் தீர்ப்புக்கூட மற்ற வழக்குகளின் தீர்ப்புகளைப் பொறுத்து எந்த நிலையை ஏற்படுத்தும் என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையிலே உணர்ந்து அரசாங்கம் புதிய சட்டத்தை உருவாக்க விரைவாக நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பரிசீலித்து முடிவு எடுக்கப் படும்.

(இ) அம்பத்தூர் சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவன நிர்வாகிகளின் போக்கினால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டு இருக்கும் அல்லல் குறித்து

THIRU A. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, on behalf of the hon. Member, Thirumathi T. N. Anandanayaki, I call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importances namely, the hardships caused to the labourers of Southern Structural, of India at Ambathur by the unhelpful attitude of the management in solving their problems.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: சென்னை பட்டாபிராமிலுள்ள சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் லிமிடெட் என்னும் தொழிற்சாலையில் சுமார் 1,200 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இத்தொழிற்சாலையில் இரயில் பெட்டிகள் (Railway wagons) மற்றும் கிரேன்கள் முதலியவை தயாரிக்கப்படுகின்றன. இத்தொழிற்சாலை நிதி நிலைமையின் காரணமாக 1969 முதல் 1971 வரை மூடப்பட்டது. பிறகு மேற்படி தொழிற்சாலையின் நிர்வாகத்தை மட்டும் தமிழ்நாடு அரசு 8—1—1971 முதல் ஏற்று நடத்தி வருகிறது.

இத்தொழிற்சாலையில் சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் யுனைடெட் யூனியன் என்னும் தொழிற்சங்கம் இயங்கி வருகிறது. தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்துக்கும் உள்ள ஒப்பந்தம் 31—12—74 தேதியுடன் முடிவடைந்ததால், தொழிற்சங்கம் ஊதிய உயர்வு, பஞ்சப்படி முதலிய கோரிக்கைகளை நிர்வாகத்தின் முன் வைத்தது. இருதரப்பாரும் நேரடிப் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். ஆனால், இரு தரப்பினருக்கும் உடன்பாடு ஏற்படவில்லை. தொழிற்சங்கத் தலைவர் என்னை சந்தித்து இப்பிரச்சினையைப்பற்றி முறையீடு செய்தார். மீண்டும் தொழிலாளர் நல இணை ஆணையாளர் முன்பு சமரசப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று, தொழில் தகராறு சட்டம் 12 (3) பிரிவின் கீழ் இரு தரப்பினருக்கும் இடையில் 3-4-1975 அன்று ஒரு உடன்பாடு கையெழுத்திடப்பட்டுள்ளது.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) 1975 ஆம் ஆண்டு, சென்னை மாநகரக் காவல் துறை (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் துறை (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.